தமிழ்நாடு அரசு

# சிறுபான்மையினர் நலத்துறை

807. 5வது தளம் அண்ணாசாலை, சென்னை – 2 தொலை பேசி எண். 044–28523544

இ,மெயில் . tnminoritieswelfare@yahoo.com


## சிறுபான்மையின மாணவ–மாணவியர்களுக்கு பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை வழங்குதல் 2016–17 (Pre-matric Scholarship)

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள சிறுபான்மையினரான இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர் புத்தமதத்தினர் பார்சி மற்றும் ஜெயின் மதத்தை சார்ந்த மாணவ/ மாணவியர்களுக்கு 2016–17 ஆம் ஆண்டிற்கு பள்ளிபடிப்பு கல்வி உதவித்தொகை (புதுப்பித்தல் மற்றும் புதியது) பெற விண்ணப்பங்கள் ஆன்லைன் (Online) மூலம் வரவேற்கப்படுகின்றன. தமிழ்நாட்டிற்கு 2016–17 ஆம் ஆண்டிற்கு பள்ளி படிப்புக்கான (புதியது=Fresh) மதவாரியான ஒதுக்கீடு மத்திய அரசால் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| முஸ்லீம்கள் | கிறித்துவர்கள் | சீக்கியர்கள் | பௌத்தர்கள் | ஜெயினர்கள் | பார்சிக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 53763 | 58559 | 148 | 84 | 1291 | 14 | 113859 |

மேற்குறிப்பிட்டுள்ள ஒதுக்கீட்டிற்கு மேல் விண்ணப்பங்கள் வரும் நிலையில் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் குறைவாக பதிவு செய்துள்ள மாணவ/மாணவியர்களை ஒதுக்கீட்டின்படி மத்திய அரசால் தேர்வு செய்யப்படுவர். இதில் 30% மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். புதுப்பித்தலுக்கான (Renewal) ஒதுக்கீடு இல்லாததால் தகுதி வாய்ந்த அனைத்து புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

### உதவித்தொகை பெற தகுதி மற்றும் நிபந்தனைகள்

- முந்தைய ஆண்டின் இறுதித்தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) **50 விழுக்காடு** மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்
- பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூபாய் **ஒரு இலட்சத்திற்கு மிகாமல்** இருத்தல் வேண்டும்.
- பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை / ஆதி–திராவிடர் நலத்துறை மற்றும் இதர துறைகள், நலவாரியங்கள் மூலம் கல்வி உதவித்தொகை பெறுபவராக இருத்தல் கூடாது.
- குடும்பத்தில் அதிக பட்சம் இரு குழந்தைகளுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்
- **சரியான ஆதார் எண் கண்டிப்பாக** அளிக்கப்பட வேண்டும்

**இத்திட்டத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் படிப்புகளுக்கு மாணவ / மாணவியர்கள் Online மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஆப்லைன் (Offline)** விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாது. மாணவ / மாணவியர் online மூலம் **www.scholarships.gov.in** என்ற இணையதள முகவரியில் New User? Register Now என்பதை தெரிவு செய்து முக்கிய விவரங்களை பூர்த்தி செய்து Register என்பதை கிளிக் செய்ய வேண்டும். பின்னர் ஒரு Student ID தங்களுக்கு அளிக்கப்படும். மேலும் தாங்கள் பதிவு செய்துள்ள கைபேசி எண்ணிற்கு Password வரும். பின்னர் Existing User ? Login என்பதை தெரிவு செய்து விண்ணப்பத்தில் மேற்கொண்டு கேட்கப்படும் விவரங்களை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும். இவை அனைத்தையும் விடுபடாமல் பூர்த்தி செய்து கோரப்பட்டுள்ள இணைப்புகளை ஸ்கேன் (SCAN) செய்து அப்லோடு (upload) செய்ய வேண்டும். மாணவர் / மாணவியர் புகைப்படம், முந்தைய ஆண்டின் மதிப்பெண் பட்டியல்/சான்றிதழ், வருவாய் அலுவலரால் அளிக்கப்பட்ட (1) பெற்றோர் / பாதுகாவலரின் வருமான சான்றிதழ் (2) மதம் / சாதிக்கான சான்றிதழ் அல்லது பெற்றோர் / பாதுகாவலரின் வருமானம் மற்றும் மதத்திற்கான சுயசான்றொப்பம், வங்கி பாஸ் புக் நகல் , ஆதார் எண், கல்வி நிலையத்தால் அளிக்கப்பட்ட சரிபார்ப்பு படிவம் ( verification form ) ஆகியவற்றை ஸ்கேன் செய்து அப்லோட் செய்ய வேண்டும். இவ்வாறு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து அதனுடன் இணைப்புகளை இணைத்து கீழ்கண்ட காலக்கெடுவிற்குள் கல்வி நிலையத்தில் மாணவ / மாணவியர்கள் விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| **1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர் Online மூலம் www.scholarships.gov.in என்ற இணைய தள முகவரியில் பள்ளி படிப்பு கல்வித் தொகைக்கு விண்ணப்பிக்க கடைசி நாள்** | **15–7–2016 முதல் 31–8–2016 வரை** |

### பொதுவான விவரங்கள்

மாணவ, மாணவியர்கள் விண்ணப்பங்களை தாங்கள் பயிலும் கல்வி நிலையத்தில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். நேரடியாக சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –2 க்கு அனுப்பி வைக்கப்படும் கல்வி உதவித் தொகை விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மாணவ / மாணவியர் ஆதார் எண் விவரத்தை தங்களுடைய வங்கி கணக்கில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (Student should seed their Aadhaar number in their bank account)

2015–16ல் 1 ஆம் வகுப்பு முதல் 8– ஆம் வகுப்பு வரை பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்து மத்திய அரசிடமிருந்து கல்வி உதவித்தொகை பெற்ற மாணவ / மாணவியர் 2016–17ல் புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்க தங்களுடைய Student Registration ID என்ற குறியீட்டு எண் குறிப்பிட வேண்டும். இந்த குறியீட்டு எண் விவரத்தை அறிந்து கொள்ள **www.bcmbcmw.tn.gov.in Prematric scholarship 2015-16 sanction list** என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளவும்.

### கல்வி நிலையங்கள் விண்ணப்பங்களை சரிபார்த்து அனுப்ப கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்:–

1) தலைமையாசிரியர் மாணவ/மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் மொத்தம் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருப்பதை உறுதிசெய்ய வேண்டும். விடுதியில் தங்கி பயில்பவர் என்று விண்ணப்பத்தில் தெரிவித்திருப்பின் அதற்கான சான்றினை மாணவ / மாணவியரிடமிருந்து பெற்று சரிபார்த்திட வேண்டும். விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்துக் கீழ் உள்ளதா என்றும், சிறுபான்மை மதத்தை சார்ந்தவரா என்றும் இன்ன பிற விவரங்களையும் சரி பார்த்த பின்னர் மாணவ/ மாணவியரிடமிருந்து பெறப்படும் ஆன்லைன் விண்ணப்பப்படிவங்களை சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசியர் சரிபார்த்து ஆன்லைன் மூலம் 31.8.2016க்குள் பார்வேர்டு (Forward) செய்ய வேண்டும்.

2) தகுதி வாய்ந்த மாணவ / மாணவியரின் பெயர் பட்டியலை தங்கள் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அளிக்க வேண்டும்.

3) தகுதி வாய்ந்த விண்ணப்பங்களை தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் சரிபார்த்து ஆன்லைனில் பார்வேர்டு (Forward) செய்ய வேண்டும். தகுதியற்ற விண்ணப்பங்கள் என்றாலோ அல்லது தங்கள் கல்வி நிலையத்தை சாராத மாணவ / மாணவியர் என்றால் அந்த விண்ணப்பத்தை ஆன்லைனில் தவறாமல் தாங்களே நிராகரிக்க வேண்டும். அவ்வாறு நிராகரிக்கப்படாமல் இருந்தால் விண்ணப்பம் சரிபார்க்க வேண்டிய கடைசி நாளுக்கு அடுத்த நாளில் அவை தானாகவே மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு ஆன்லைனில் சென்றடையும். எனவே, தகுதியற்ற விண்ணப்பங்களை கண்டிப்பாக நிராகரிக்கவும்.

### காலநீட்டிப்பு

**11 மற்றும் 12 ஆம் வகுப்பு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைக்கு** Online மூலம் **www.scholarships.gov.in** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க அறிவித்து 21–7–2016–ல் இத்துறையின் மூலம் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் தெரிவித்த காலக்கெடு **31–7–2016–லிருந்து 31.8.2016 வரை என காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது**

செ.ம.தொ.இ/762/வரைகலை/2016

**முதன்மை செயலர் / ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–2**

17w 40h